IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 653/2009
Deposition of witness for DW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சோபன் குமார் | Caste | : | |
| Father Name | : | கேசவ ரெட்டி | Calling | : | |
| Village | : | கண்டிப்பேடு | Religion | : | |
| Town | : | காட்பாடி | Age | : | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 1st day of November, 2025.

Chief Continuation:

நான் இந்த வழக்கில் 4 ம் பிரதிவாதி ஆவேன். நான் ஏற்கனவே எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். எனது தரப்பு ஆவணங்கள்.

1. 17.08.2000 தேதியிட்ட என் தகப்பனார் கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆகும்.

2. கணினி நத்தம் பட்டா ஆனது பி.வா.சா.ஆ.2 ஆகும்.

3. 09.09.2016 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் நகல் பி.வா.சா.ஆ.3 ஆகும்.

4. 05.10.2016 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் நகல் பி.வா.சா.ஆ.4 ஆகும்.

(பி.வா.சா.ஆ.3 ஆனது 09.09.2016 அன்று ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் ஆகும் மற்றும் பி.வா.சா.ஆ.4 ஆனது 05.10.2016 அன்று ஏற்படுத்தப்பட்ட 4 ம் பிரதிவாதிக்கு 1 மற்றும் 3 ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் ஆகும், மேற்கண்ட இரண்டு ஆவணங்களும் அசல் ஆவணத்துடன் ஒப்பிட்டு பார்த்து குறியீடு

செய்யப்படுகிறது. ஆனால், வாதியின் வழக்கறிஞரால் மேற்படி ஆவணங்கள் இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போதே எழுதப்பட்ட ஆவணங்கள் என்பதாலும் அசலை ஏன் நீதிமன்றத்தில் குறியீடு செய்யவில்லை என்பதை குறித்த விவரம் பிரமாண பத்திரத்தில் தெரிவிக்கவில்லை என்பதாலும் மேற்படி ஆவணங்களை ஒப்பிட்டு குறியீடு செய்வதற்கு செல்லும் தன்மை இல்லை என்றும் ஆட்சேபனை செய்யப்படுகிறது.)

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI